# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 63/2025 | Date | : 25.02.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.1** | Taluk | : |
| Name | : **மாதேஸ்வரன்** | Calling | : |
| Father / Husband Name | : **பொன்னுவேல்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.02.2026.

**(எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். 4–ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355– BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1. நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, கனககிரி கிராமத்தில் குடியிருந்து லாரி டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 1 வருடத்திற்கு முன்பாக இரவு சுமார் 7.30 மணியளவில் காகாபாளையம், மகாலட்சுமி ஐயங்கார் பேக்கரி அருகே கூட்டமாக இருந்தது. வேடிக்கை பார்த்தபோது, நான் கீழே விழுந்து விட்டேன். தலையில் காயம் ஆகிவிட்டது. சேலம் அரசு மருத்துவமனையில் அட்மிட்டில் இருந்த என்னை மகுடஞ்சாவடி போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 31.10.2024ம் தேதி ஆஜர் எதிரிகள் கெட்ட வார்த்தையால் பேசியதாகவும், கையால் முகத்தில் குத்தி, கையாலும் காலாலும் முதுகில் அடித்து உதைத்தும் இரும்பு கம்பியால் முன் மண்டையிலும், வலது கையிலும் அடித்து ரத்தகாயத்தை உண்டாக்கியதாக புகாரிலும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளும் நாங்களும் சமாதானம் ஆகிவிட்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கபட்டது.

**மறுவிசாரணை:–** இல்லை.

Witness - Sd/- Matheshwaran

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D.Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.